| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும்,<br>இணை இயக்குநர் (கல்வி),<br>புதுச்சேரி. |

**ந.க.எண்.242170 / எச்எப்1 /2018** **நாள்.23.08.2018**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச் 2019 – புதிய பாடத்திட்டம் – புதிய பாடத் தொகுதி குறியீடு (Group Code) மற்றும் புதிய பாடக் குறியீடு ஒதுக்கீடு செய்துள்ளமை – பட்டியல் அனுப்பி வைத்தல் – சார்பு.

**பார்வை**
1. அரசாணை (நிலை) எண்.99, பள்ளிக் கல்வி (க.ஆ.ப)த்துறை, நாள்.22.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.152, பள்ளிக் கல்வி(பக1(1))த் துறை, நாள்.24.07.2018.

------

பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி, 2018–2019 கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், மார்ச் 2019 முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்காக புதிய பாடத் தொகுதி எண்களும் (Group Code), பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி, புதிய பாடத்திட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கணினி பயன்பாடுகள், கணினி தொழில்நுட்பம் போன்ற பாடங்களுக்கு புதிய பாடக் குறியீடு எண்களும் (Subject Code) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புதிய பாடத் தொகுதி பட்டியல் (Group Code List) மற்றும் புதிய பாடக் குறியீடு பட்டியல் (Subject Code List) ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், மேற்குறிப்பிட்ட பட்டியல்கள் பெறப்பட்டமைக்கான ஒப்புதலை உடன் மின்னஞ்சலில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு:** பட்டியல்கள் – 2

ஒம்/–

**இயக்குநர்**

**நகல்:**

1. அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.